
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 67 | 4 Pages | 5.10.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 67 | 4 பக்கங்கள் | 5.10.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**களவினா லாகிய ஆக்கம் அளவிறந்**
**தாவது போலக் கெடும்**

**விளக்கம்:**
களவு செய்து பொருள் கொள்வதால் உண்டாகிய ஆக்கம் பெருகுவது போல் தோன்றி இயல்பாக இருக்க வேண்டிய அளவையும் கடந்து கெட்டு விடும்.

## வெளியுறவுத்துறை அமைச்சர் இலங்கை பயணம்



இலங்கை, அக். 5

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அரசு முறைப் பயணமாக இலங்கை செல்கிறார். இலங்கையில் புதிய அதிபர் அநுர குமரதிசநாயக்க பதவியேற்றுள்ள நிலைழ்யில் இருநாடுகள் இடையிலான கூட்டாண்மையை உறுதி செய்ய பயணம். இருநாட்டு வெளியுறவுக் கொள்கைகளை வலுப்படுத்தும் விதமாக ஜெய்சங்கர் இலங்கை பயணம் மேற்கொள்கிறார்.தமிழகமீனவர்கள்இலங்கைகடற்படையால்கைதுசெய்யப்படுவது அதிகரித்துள்ள நிலையில் அதுகுறித்து பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இஸ்ரேலில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் பலி: ஹமாஸ் அமைப்பு பொறுப்பேற்பு



டெல் அவிவ், அக். 5

இஸ்ரேலின் தெற்கு டெல் அவிவ் நகரில் உள்ள யாபா பகுதியில் இரு மர்ம நபர்கள் திடீரென பொது மக்கள்மீதுதுப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர், 10க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது பயங்கரவாத தாக்குதலாக இருக்கலாம் என போலீசார் சந்தேகம் தெரிவித்தனர்.

மேலும், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட இரு மர்ம நபர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என போலீசார் தெரிவித்தனர். அவர்கள் எந்த பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில். இஸ்ரேலில் நடத்திய துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு ஹமாஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

## இஸ்ரேலுக்கான பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்திய அதிபர் ஜோ பைடன்



வாஷிங்டன், அக். 5

இஸ்ரேல் நாட்டின்மீது ஈரான் நேற்று முன்தினம் இரவு ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதுப்பற்றி தெரியவந்ததும் உடனடியாக இஸ்ரேலுக்கு உதவும் வகையில் ஈரானின் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தும்படி அமெரிக்க ராணுவத்துக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டார்.

அப்போது பத்திரிகையாளர்களைச் சந்தித்த அதிபர் ஜோ பைடன், அமெரிக்கா இஸ்ரேலுக்கு முழு ஆதரவாக உள்ளது என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இஸ்ரேலின் பாதுகாப்புக்கான அமெரிக்காவின் இரும்புக் கவச உறுதிப்பாட்டை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இது தொடர்பாக அதிபர் பைடன் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதளசெய்தியில், இன்று காலை இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் ஏற்றுக்கொள்ள முடியாத தாக்குதலைப் பற்றி விவாதிக்கவும், புதிய தடைகள் உள்பட இந்தத் தாக்குதலுக்கான பதிலை ஒருங்கிணைக்கவும் ஜி7 தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தேன். இஸ்ரேலின் பாதுகாப்பிற்கான அமெரிக்காவின் இரும்புக் கவச உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினேன் என பதிவிட்டுள்ளார்.

## இஸ்ரேலுக்குள் நுழைய ஐ.நா. பொதுச் செயலாளருக்கு தடை

ஜெருசலேம், அக். 5

இஸ்ரேல், காசா இடையிலான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் ஆதரவு அளித்து வருகின்றனர். அவர்களை அழிக்கும் வகையில் இஸ்ரேல் தொடர்ச்சியாக வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது. ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் மற்றும் முக்கியத் தளபதி கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடி கொடுப்போம் என ஈரான் தெரிவித்திருந்தது. இதற்கிடையே, நேற்று இரவு இஸ்ரேல் மீது ஈரான் 200க்கும் அதிகமான ஏவுகணைகளை வீசியது. ஹைபர்சோனிக் வகை ஏவுகணை மூலம் இந்த தாக்குதலை ஈரான் நடத்தியதால் அங்கு போர்ப்பதற்றம் நிலவுகிறது. இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் இஸ்ரேல் நாட்டிற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது என அந்நாட்டு வெளியுறவுத் துறை மந்திரி இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்தார். இதுதொடர்பாகஅவர் கூறியதாவது: இஸ்ரேல் மண்ணில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் காலடி எடுத்து வைக்க தகுதியற்றவர். இஸ்ரேல் மீதான ஈரான் தாக்குதலை உலக நாடுகள் கண்டித்தன. இதனை செய்யாமல் மவுனம் காக்கும் யாருக்கும் இஸ்ரேல் மண்ணில் கால் வைக்க தகுதி கிடையாது. ஹமாஸ், ஹிஸ்புல்லா, ஹவுதி மற்றும் தற்போது ஈரானின் பயங்கரவாதிகளை ஆதரிக்கும் நபர் இஸ்ரேல் வரலாற்றின் ஒரு கறையாக நினைவு கூரப்படுவார் என தெரிவித்தார்.

# பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற கவர்னர், துணை முதலமைச்சர்

பல்கலைக்கழக வேந்தரும், தமிழ் நாடு கவர்னருமான ஆர்.என்.ரவி மாணவ, மாணவியருக்கு பட்டங்கள்வழங்குகிறார். முதன்முறையாக பொதுவெளியில் ஒரே மேடையில் கவர்ன, துணை முதலமைச்சர் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தமிழ் நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் 14வது பட்டமளிப்பு விழா இன்று தொடங்கியது. இதில் 3638 பேர் பட்டம் பெறுகின்றனர். திருப்பூரில் குன்னத்துரை சேர்ந்த N. அபினேஷ் குமார் சிறந்த மாணவர் களுக்கான கோல்ட் மெடல் பெற்றார். இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழக வேந்தரும், தமிழ்நாடு கவர்னருமான ஆர்.என்.ரவியும் . பல்கலைக்கழகத்தின் இணை வேந்தரும், துணை முதல்வருமான உதயநிதி




ஸ்டாலினும் பங்கேற்றுள்ளனர். இருவரும் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். பல்கலைக்கழக வேந்தரும், தமிழ்நாடு கவர்னருமான ஆர்.என். ரவி மாணவ, மாணவியருக்கு பட்டங்கள் வழங்குகிறார். முதன்முறையாக பொதுவெளியில் ஒரே மேடையில் கவர்ன, துணை முதலமைச்சர் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 19 நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, அக். 5

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் 8 மாவட்டங்களில் 83 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள், புனரமைக்கப்பட்ட வாய்க்கால்கள், அணைமறுகட்டுமானப் பணி, புதிய குளம், புதிய அலுவலகக் கட்டிடம் உள்ளிட்ட 19 நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்.

திருப்பூர், தாராபுரம் வட்டம், கவுண்டையன்வலசு கிராமம் அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே 11 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை, மாம்பாடிபுங்கந்துறை கிராமம் அமராவதி ஆற்றில் 11 கோடியே 56 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணை, குன்றத்தூர், கொளப்பாக்கம் கிராமத்தில்; கொளப்பாக்கம் கால்வாய் 1 முதல் கொளப்பாக்கம் பொழிச்சலூர் சாலையில் இணைப்பு ஓடை வரை 11 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூடிய வடிவிலான கால்வாய், வாலாஜாபாத், உள்ளாவூர் கிராமத்தின் அருகே தொள்ளாழி மடுவின் குறுக்கே 7 கோடி ரூபாய் செலவில்கட்டப்பட்டுள்ளஅணைக்






கட்டு,

உத்திரமேரூர் வட்டம், இருமரம் கிராமத்தின்அருகேபுத்தளிமடுவின் குறுக்கே 3 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை, திசையன்விளை, கஸ்தூரிரெங்கபுரம் கிராமம் பகுதி 2ல் 4 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய குளம், திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் வெள்ள நீர் சூழ்வதை தடுக்கும் வகையில் திருப்பணி கரிசல்குளம் வெள்ள நீரை 3 கோடியே 79 லட்சம் செலவில் முடிவுற்ற நெடுங்குளம், மேகமுடையார் குளம் வழியாக சத்திரம் புதுக்குளம் கண்மாய்க்கு திருப்பும் பணி,

ஒட்டப்பிடாரம், வடக்கு கல்மேடு கண்மாயில் 1 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணி, தூத்துக்குடி, பேரூரணி அணைக்கட்டில் 1 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணி, தூத்துக்குடி, திரு வைகுண்டம், சம்பன்குளம் ஏரியின் வழங்கு வாய்க்காலின் இடது கரையில் 50 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புப் பணிகள், திருச்சி மாவட்டத்தில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு கோட்ட தலைமையிட உப கோட்டத்துடன் புதிய அலுவலகக் கட்டிடம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தலைமைச் செயலகத்தில், இந்து சமய அற நிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்ட கோவில்களில் பணி புரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் 50 லட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு தலா 10,000 ரூபாய்க்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.


இதன்மூலம் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற உயர்கல்வி பயிலும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் பயன்பெறுவர். கடந்தாண்டு இத்திட்டத்தின் மூலம் 400 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2024ம் ஆண்டுக்கான 'தேசிய நல்லாசிரியர் விருது 'பெற்ற ஆசிரியர்கள் இரா. கோபிநாத் மற்றும் இரா. சே. முரளிதரன் ஆகியோர் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினை இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

இந்த நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகா னந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர்மதுமதி,பள்ளிக்கல்விஇயக்குநர் கண்ணப்பன் உடன, இருந்தனர்.

# சிவகங்கையில் வானவில் மன்ற உறுப்பினர்களுக்கு கையடக்க கணினி வழங்கும் நிகழ்வு



சிவகங்கை:அக் 05

சிவகங்கை மாவட்டம் வானவில் மன்ற உறுப்பினர்களுக்கு கையடக்க கணினி வழங்கு நிகழ்வு மீளாய்வு மற்றும் பயிற்சி முகாம் சிவகங்கை மருது பாண்டியர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலக அரங்கில் நடைபெற்றது.

சிவகங்கை வானவில் மன்ற கருத்தாளர்களுக்கு செப்டம்பர் மாத வேலை அறிக்கை சமர்பித்தல் மற்றும் மீளாய்வு கூட்டம் அக்டோபர் மாதத்திற்கான எளிய அறிவியல் சோதனைகளை விளக்கும் பயிற்சியும் சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து வழிகாட்டுதலில் நடைபெற்றது. மாவட்ட கல்வி அலுவலர் வடிவேல் தலைமையில் வானவில் மன்ற கருத்தாளர்களுக்கு கையடக்க கணினி வழங்கப்பட்டது.தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் மாவட்ட உதவி திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ வானவில் மன்ற செயல்பாடுகளையும் கருத்தாளர்களின் அனுபவங்களை கேட்டறிந்து உற்சாகப்படுத்தினார், சிவகங்கை மாவட்ட வானவில் மன்றஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ கருத்தாளர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கினார்.தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளரும் வானவில் மன்ற இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி அன்பாசிரியர் விருது வாங்கியதை கௌரவித்து பொன்னாடை போர்த்தினர்.இந்நிகழ்வில் வானவில் மன்ற கருத்தாளர்கள் பிரியங்கா பாண்டிசெல்வி இராஜயோகம் செந்தாமரைசெல்வி ஜோதி ஆகியோர் அறிவியல் பரிசோதனைகளையும் கணினி செயல்பாடுகளையும் விளக்கினர் கூறினர்.இந்நிகழ்வில் வானவில் மன்ற நிர்வாகிகளும் சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# ஆயுத பூஜை தொடர் விடுமுறை: பஸ், ரெயில்கள் நிரம்பின

சென்னை, அக். 5

பண்டிகை மற்றும் விசேஷ நாட்களில் வெளியூர் பயணம் அதிகரிப்பது வழக்கம். வடமாநிலங்களில் சிறப்பாக கொண்டாடப் படும் தசரா பண்டிகை நேற்று தொடங்கியது.

இதனால் சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து வடமாநிலங்களுக்கு செல்லும் ரெயில்கள் அனைத்திலும் இடங்கள் நிரம்பின.

தமிழகத்தில் ஆயுதபூஜை, வருகிற 11ந் தேதி (வெள்ளிக் கிழமை), 12ந் தேதி (சனிக்கிழமை) விஜய தசமி கொண்டாடப்பட உள்ளது. இதனால் 3 நாட்கள் தொடர் விடுமுறை கிடைக்கிறது.

இதனை தொடர்ந்து சொந்த ஊர்களுக்கு பயணம் செய்ய திட்டமிட்டு பஸ், ரெயில்களில் முன்பதிவு செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து வழக்கமாக செல்லும் எல்லா ரெயில்களிலும் 10ந் தேதி (வியாழக்கிழமை) பயணத்திற்கான இடங்கள் நிரம்பின.

குறிப்பாக தென் மாவட்ட பகுதிகளுக்கு செல்லும் நெல்லை, முத்துநகர், அனந்தபுரி, திருச்செந்தூர், பொதிகை, பாண்டியன், கன்னியாகுமரி உள்ளிட்ட அனைத்து ரெயில்களிலும் எல்லா வகுப்புகளும் நிரம்பிவிட்டன.

இதேபோல கோவை செல்லக்கூடிய ரெயில்களில் இடங்கள் நிரம்பி காத்திருப்போர் பட்டியல் நீடிக்கிறது. பெங்களூர் பயணத்திற்கும் இடமில்லை. சிறப்பு ரெயில்களும் நிரம்பிவிட்டதால் மக்கள் அரசு பஸ்களை நாடி செல்கின்றனர்.

சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு வந்தே பாரத் ரெயில்களும் நிரம்பிவிட்டன. தீபாவளி, பொங்கல், வரை அதில் இடமில்லை.

ஆயுதபூஜை விடுமுறை பயணத்திற்கு இதுவரை 27 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். அடுத்த வாரம் முன்பதிவு விறு விறுப்பாக இருக்கும் என்று அரசு விரைவு போக்கு வரத்து கழக மேலாண்மை இயக்குனர் மோகன் தெரி வித்தார்.

ஆயுத பூஜை விடுமுறையையொட்டி வருகிற 9, 10ந் தேதிகளில் ஆயிரத்திற்கும் அதிகமான சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிட்டுள்ளோம். இதுபற்றிய அறிவிப்பு 7ந் தேதி வெளியிடப்படும்.

பொதுமக்கள் நெரிசல் இல்லாமல்பயணத்தைதொடரமுன்பதிவு செய்து கொள்ளலாம். தீபாவளி பண்டிகைக்கான சிறப்பு பஸ்கள் இயக்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம் 14 அல்லது 15ந் தேதி நடைபெறும். அதில் தமிழகம் முழுவதும் சிறப்பு பஸ்கள் இயக்குவது குறித்து முடிவு செய்து அறிவிக்கப்படும். அரசு விரைவு பஸ் போக்குவரத்து கழகத்திற்கு புதிதாக 200 பஸ்கள் வந்துள்ளன. பழைய பஸ்களுக்கு பதிலாக இவை இயக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகனி



# சிறுமியை கர்ப்பமாக்கிய பூக்கடைக்காரர் போக்சோவில் கைது

ஈரோடு, அக். 5

ஈரோடு மாநகர பகுதியில் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதை தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே முதற்கட்டமாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. தற்போது ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகை என தொடர்ந்து பண்டிகை வர உள்ளதால் போக்குவரத்தை சரி செய்யும் வகையில் ஈரோடு மாநகர் பகுதியில் 2வது கட்டமாக ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி நேற்று தொடங்கியது. கருங்கல் பாளையம் முதல் காளை மாட்டு சிலை வரை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. இதைத்தொடர்ந்து ஈரோடு பன்னீர்செல்வம் பார்க் முதல் மீனாட்சி சுந்தரனார் சாலை வழியாக ஈரோடு அரசு மருத்துவமனை ரவுண்டானா வரை ஆக்கிரமிப்புகள் மற்றும் பணி தொடங்கியது.

இதற்காக மாநகராட்சி சார்பில் பணியாளர்கள் ஜே.சி.பி. எந்திரம் மூலம் விளம்பர தட்டிகள், போர்டுகளை அகற்றினர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அக்கிரமிப்புகளை அகற்றி வருகின்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 50க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது வியாபாரிகள், போலீசார் மற்றும் நெடுஞ்சாலைதுறை அதிகாரிகளிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து நாளை ஈரோடுமேட்டூர் ரோடு ஸ்வஸ்திக் கார்னர் வரை ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி நடைபெறுகிறது.

# சோழவந்தான் அருகே 7 வயது சிறுவன் வெட்டிக்கொலை

சோழவந்தான், அக். 5

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள திருவேடகம் காலனி காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் அய்யனார் (வயது 40). இவருக்கு திருமணமாகி உமா என்ற மனைவியும் 2 குழந்தைகளும் உள்ளனர்.

பக்கத்து வீட்டில் வசிப்பவர் முத்துசாமியின் மகன் விவேக். இவருக்கும் உமாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு கள்ளக்காதலாக மாறியது. அதனை தொடர்ந்து அவர்கள் வீட்டை விட்டு ஓடிவிட்டனர்.

உமா வீட்டை விட்டு விவேக்குடன் சென்றதால் மனவிரக்தியடைந்த அவரது கணவர் அய்யனார் கடந்த சில வருடங்களாக தனிமையில் வாழ்ந்து வந்தார். மனைவி பிரிந்து சென்றதால் கேலி பேச்சுகளுக்கு ஆளானார்.

இதனால் ஆத்திரமடைந்த அய்யனார், நேற்றிரவு வீட்டில் தூங்கி கொண்டிருந்த முத்துசாமி, அவரது மனைவி தவமணி, பேரன் மிதுன் என்ற ஜிஸ்னு மாதேஷ் பாண்டியன் ஆகியோரை அரிவாளால் சரமாரியாக வெட்டினார்.

இவர்களது அலறல் சத்தம் கேட்ட அக்கம் பக்கத்தினர் திரண்டதால் அய்யனார் தப்பி ஓடிவிட்டார். அருகில் இருந்தவர்கள் சோழவந்தான் போலீசில் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் ரத்த வெள்ளத்தில் கிடந்தவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் சிகிச்சை பலனின்றி மிதுன் என்ற ஜிஸ்னு மாதேஷ் பாண்டியன் உயிரிழந்தான்.

இதுகுறித்து சிறுவனின் தாய் அன்பரசி கொடுத்த புகாரின்பேரில் சோழவந்தான் போலீசார் வழக்குப் பதிவு செய்து அய்யனார் உள்ளிட்ட 4 பேரை தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# 2026ம் ஆண்டு பா.ஜ.க. தலைமையிலான ஆட்சி அமையும்போது தி.மு.க.வின் ஊழல் வெளியே கொண்டு வரப்படும் எச்.ராஜா



சோழவந்தான், அக். 5

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள திருவேடகம் காலனி காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் அய்யனார் (வயது 40). இவருக்கு திருமணமாகி உமா என்ற மனைவியும் 2 குழந்தைகளும் உள்ளனர்.

பக்கத்து வீட்டில் வசிப்பவர் முத்துசாமியின் மகன் விவேக். இவருக்கும் உமாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு கள்ளக்காதலாக மாறியது. அதனை தொடர்ந்து அவர்கள் வீட்டை விட்டு ஓடிவிட்டனர்.

உமா வீட்டை விட்டு விவேக்குடன் சென்றதால் மனவிரக்தியடைந்த அவரது கணவர் அய்யனார் கடந்த சில வருடங்களாக தனிமையில் வாழ்ந்து வந்தார். மனைவி பிரிந்து சென்றதால் கேலி பேச்சுகளுக்கு ஆளானார்.

இதனால் ஆத்திரமடைந்த அய்யனார், நேற்றிரவு வீட்டில் தூங்கி கொண்டிருந்த முத்துசாமி, அவரது மனைவி தவமணி, பேரன் மிதுன் என்ற ஜிஸ்னு மாதேஷ் பாண்டியன் ஆகியோரை அரிவாளால் சரமாரியாக வெட்டினார்.

இவர்களது அலறல் சத்தம் கேட்ட அக்கம் பக்கத்தினர் திரண்டதால் அய்யனார் தப்பி ஓடிவிட்டார். அருகில் இருந்தவர்கள் சோழவந்தான் போலீசில் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் ரத்த வெள்ளத்தில் கிடந்தவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் சிகிச்சை பலனின்றி மிதுன் என்ற ஜிஸ்னு மாதேஷ் பாண்டியன் உயிரிழந்தான்.

இதுகுறித்து சிறுவனின் தாய் அன்பரசி கொடுத்த புகாரின்பேரில் சோழவந்தான் போலீசார் வழக்குப் பதிவு செய்து அய்யனார் உள்ளிட்ட 4 பேரை தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# மகனை கொன்ற சோகத்தில் சிகிச்சையில் இருந்த தந்தையும் உயிரிழப்பு



சிவகாசி, அக். 5

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள திருத்தங்கல் பொம்மைய நாயக்கர் தெருவை சேர்ந்தவர் ராமசாமி (வயது 74). ஓய்வு பெற்ற வேளாண் அதிகாரியான இவருக்கு 3 மகன்கள் உள்ளனர்.

இதில் 3வது மகன் சுப்பிரமணிக்கு (34) மதுகுடிக்கும் பழக்கம் இருந்தது. இதனால் அடிக்கடி மதுகுடிக்க பணம் கேட்டு தந்தை ராமசாமியை தொந்தரவு செய்து வந்துள்ளார். கடந்த 1ந்தேதி சுப்பிரமணியன் வழக்கம்போல் மது குடிக்க பணம் கேட்டுள்ளார்.


ஆனால் ராமசாமி தரமுடியாது என கண்டிப்புடன் தெரிவித்தார். இதனால் தந்தை மகனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த சுப்பிரமணி தந்தையை தாக்கினார். இதையடுத்து வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து ராமசாமி மகனை சரமாரியாக வெட்டினார்.

இதில் படுகாயமடைந்த சுப்பிரமணியன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து திருத்தங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

கைதான ராமசாமிக்கு சர்க்கரை நோய் உள்ளிட்ட பாதிப்புகள் இருந்தது. இதற்காக அவர் மருந்துகளை உட்கொண்டு வந்தார். மகனை கொன்றுவிட்ட சோகத்தில் இருந்த ராமசாமிக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து அவரை மதுரை அரசு ஆஸ்பத்திரியில் போலீசார் சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி ராமசாமி பரிதாபமாக இறந்தார்.

# இது என்னடா தமிழுக்கு வந்த சோதனை! அங்கன்வாடி மையத்தில் அல்லோலப்பட்ட தாய்மொழி




சிவகாசி, அக். 5

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள திருத்தங்கல் பொம்மைய நாயக்கர் தெருவை சேர்ந்தவர் ராமசாமி (வயது 74). ஓய்வு பெற்ற வேளாண் அதிகாரியான இவருக்கு 3 மகன்கள் உள்ளனர்.

இதில் 3வது மகன் சுப்பிரமணிக்கு (34) மதுகுடிக்கும் பழக்கம் இருந்தது. இதனால் அடிக்கடி மதுகுடிக்க பணம் கேட்டு தந்தை ராமசாமியை தொந்தரவு செய்து வந்துள்ளார். கடந்த 1ந்தேதி சுப்பிரமணியன் வழக்கம்போல் மது குடிக்க பணம் கேட்டுள்ளார்.

ஆனால் ராமசாமி தரமுடியாது என கண்டிப்புடன் தெரிவித்தார். இதனால் தந்தை மகனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த சுப்பிரமணி தந்தையை தாக்கினார். இதையடுத்து வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து ராமசாமி மகனை சரமாரியாக வெட்டினார்.

இதில் படுகாயமடைந்த சுப்பிரமணியன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து திருத்தங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

கைதான ராமசாமிக்கு சர்க்கரை நோய் உள்ளிட்ட பாதிப்புகள் இருந்தது. இதற்காக அவர் மருந்துகளை உட்கொண்டு வந்தார். மகனை கொன்றுவிட்ட சோகத்தில் இருந்த ராமசாமிக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்துஅவரை மதுரை அரசு ஆஸ்பத்திரியில் போலீசார் சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி ராமசாமி பரிதாபமாக இறந்தார்.

# ஈரோடு பன்னீர்செல்வம் பார்க் முதல்அரசு ஆஸ்பத்திரி ரவுண்டானா வரை ஆக்கிரமிப்புகள் அகற்றம்




ஈரோடு, அக்.5

ஈரோடு மாநகர பகுதியில் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதை தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே முதற்கட்டமாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. தற்போது ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகை என தொடர்ந்து பண்டிகை வர உள்ளதால் போக்குவரத்தை சரி செய்யும் வகையில் ஈரோடு மாநகர் பகுதியில் 2வது கட்டமாக ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி நேற்று தொடங்கியது.

கருங்கல்பாளையம் முதல் காளை மாட்டு சிலை வரை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. இதைத்தொடர்ந்துஈரோடு பன்னீர்செல்வம் பார்க் முதல் மீனாட்சி சுந்தரனார் சாலை வழியாக ஈரோடு அரசு மருத்துவமனை ரவுண்டானா வரை ஆக்கிரமிப்புகள் மற்றும் பணி தொடங்கியது.

இதற்காக மாநகராட்சி சார்பில் பணியாளர்கள் ஜே.சி.பி. எந்திரம் மூலம் விளம்பர தட்டிகள், போர்டுகளை அகற்றினர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அக்கிரமிப்புகளை அகற்றி வருகின்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 50க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது வியாபாரிகள், போலீசார் மற்றும் நெடுஞ்சாலைதுறை அதிகாரிகளிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து நாளை ஈரோடுமேட்டூர் ரோடு ஸ்வஸ்திக் கார்னர் வரை ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி நடைபெறுகிறது.

# ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை பெற வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, அக். 5

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

ஆன்லைன் சூதாட்ட தற்கொலைகளுக்குமுடிவு கட்டுவதற்கான ஒரே தீர்வு சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு உச்சநீதிமன்றத்தில் தடை பெறுவது தான். ஆனால், தீர்ப்பளிக்க ப்பட்டு 11 மாதங்களுக்கு மேலாகியும் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசால் தடை பெற முடியவில்லை. கடந்த சில மாதங்களில் மட்டும் ஆன்லைன் சூதாட்டத்தில் பணத்தை இழந்த 15 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்; லட்சக்கணக்கான குடும்பங்கள் சொத்துகளை இழந்து தவிக்கின்றன. இதேநிலை தொடருவதை தமிழக அரசு வேடிக்கைப் பார்க்கப் போகிறதா? இந்த விவகாரத்தில் தமிழக அரசு இனியும் உறங்கிக் கொண்டிருக்காமல் உச்சநீதி மன்றத்தில் ஆன்லைன் சூதாட்டத் தடை தொடர்பான வழக்கை விரைவாக விசாரணைக்கு கொண்டு வரவும், சரியான காரணங்களை முன்வைத்து ஆன் லைன் சூதாட்டத்திற்கு தடை பெறுவதற்கும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 3 தனியார் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்



ஈரோடு, அக். 5

தமிழகத்தில் சமீப காலமாக பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் சம்பவம் அதிகரித்து வருகிறது. ஈரோட்டில் ஏற்கனவே 2 தனியார் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. போலீசார் சோதனையில் அது புரளி என தெரிய வந்தது.

இந்நிலையில் மீண்டும் இமெயில் மூலம் சி.பி. எஸ்.சி பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பைஏற்படுத்திஉள்ளது. பள்ளிபுரத்தான்பாளையத்தில் ஒரு தனியார் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்நிலையில் பள்ளி இமெயில் ஐ.டி.க்கு மர்மநபர் ஒருவர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருந்தார். இதை பார்த்த பள்ளி நிர்வாகத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக பள்ளிக்குஅவசரஅவசரமாக விடுமுறை அறிவித்து இது குறித்து பெற்றோருக்கு தகவல் தெரிவித்தனர்.

பெற்றோர்களும் பதறி அடித்துக் கொண்டு பள்ளிகளுக்கு வந்து தங்களது குழந்தைகளை வேக வேகமாகவீடுகளுக்குஅழைத்து சென்றனர். பெருந்துறை டி.எஸ்.பி கணேஷ்குமார் தலைமையில் போலீசார் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு விரைந்து வந்தனர். மேலும் வெடிகுண்டு செயலிழப்புநிபுணர்களும் உடனடியாக பள்ளிக்கு வந்து வெடிகுண்டு உள்ளதாஎனமெட்டல்டிடெக்டர் கருவி மூலம் ஒவ்வொரு பகுதியாக அங்குலமாக சோதனையிட்டனர். பள்ளி கேட் மூடப்பட்டு பாதுகாப்பு பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது. இதேபோல் ஈரோடு நாராயண வாசலில் உள்ள ஒரு தனியார் பள்ளி, வீரப்பம்பாளையம் பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் போலீசார் சென்று விசாரணை நடத்தி வந்தனர்.

# தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்கு சிறப்பு பஸ்கள் கும்பகோணம் கோட்டம் சார்பில் இயக்கம்



தஞ்சாவூர், அக். 5

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்கோணம் கோட்டம் நிர்வாக இயக்குநா ்ரா. பொன்முடி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் சார்பில் நாளை (சனி) மற்றும் ஞாயிற்றுக் கிழமை வார விடுமுறை நாள்களில் பொதுமக்களின் வசதிக்காக, திருச்சி, கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூா ், மயிலாடுதுறை, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, புதுக்கோட்டை, காரைக்குடி, ராமநாதபுரம் ஆகிய ஊா ்களிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து திருச்சி, கும்பகோணம், தஞ்சாவூா ், பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருவாரூா ், மயிலாடுதுறை, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, புதுக்கோட்டை, காரைக்குடி, ராமநாதபுரம் ஆகிய ஊா ்களுக்கு இன்று, நாளை (வெள்ளி, சனிக்கிழமைகளில்) ஆகிய 2 நாள்களும் சோ ்த்து 300 கூடுதல் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

திருச்சியிலிருந்து கோயம்புத்தூர், திருப்பூா ், மதுரை ஆகிய இடங்களுக்கும், கோயம்புத்தூர், திருப்பூா ், மதுரை ஆகிய இடங்களிலிருந்து திருச்சிக்கும், திருச்சியிலிருந்து காரைக்குடி, புதுக்கோட்டை, தஞ்சாவூா ், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி ஆகிய ஊா ்களுக்கு 175 பேருந்துகள் கூடுதலாக என மொத்தம் 475 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

விடுமுறைக்கு வந்த பயணிகள் திரும்ப செல்ல 6, 7 ஆகிய தேதிகளில் சென்னை வழித்தடத்தில் 200 சிறப்பு பஸ்களும், பிற தடங்களிலும் 150சிறப்பு பஸ்களும் இயக்கப்படும். எனவே கூட்ட நெரிசலை தவிர்க்க பயணிகள் இணையதளம் அல்லது செல்போன் செயலி வாயிலாக முன்பதிவு செய்து பயணிக்கலாம். முன்பதிவு செய்யும் பயணிகளின் எண்ணிக்கைகேற்ப கூடுதலாக பஸ்கள் இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருமாவின் நாகரிக தலைவர் என்ற அடையாளம் உடைந்துவிட்டது: தமிழிசை சவுந்தரராஜன் பேச்சு



சென்னை, அக். 5

தமிழ்நாடு பாஜக மூத்த தலைவரும் தெலுங்கானா மாநில முன்னாள் கவர்னருமான டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னை தியாகராய நகரில் உள்ள கமலாலயத்தில் இன்று காலை பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தொல்.திருமாவளவன் நடத்திய மாநாட்டில் தனக்கு காந்தியின் கொள்கைகள் பிடிக்காது. அவர் இந்து மதத்தில் தீவிரமாக இருந்தவர். சாகும்போது கூட ஹரே ராம் என்று கூறியவர் என்பதால் எனக்கு அவரை பிடிக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

திருமாவளவனின் கட்சியில் கூட இந்து மத நம்பிக்கை உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவ்வளவு ஏன் திருமாவளவன் இந்து மத நம்பிக்கை உள்ளவர்தான். அவர் காந்தி பிறந்தநாள் என்பதற்காக அக்டோபர் இரண்டாம் தேதி மாநாடு நடத்தவில்லை. அன்று நிறைந்த அமாவாசை நாள் என்பதால் அந்த நாளை தேர்வு செய்து இருக்கிறார் என்பதுதான் உண்மை.

தேசப்பிதாவை தினம் தினம் வார்த்தைகளால் கொன்று கொண்டிருக்கிறார். நான் திருமாவளவன் நாகரிகமான தலைவர் என்று நினைத்திருந்தேன். ஆனால் அந்த மேடையில் அவர் பேசியதை பார்த்ததும் அவர் மீது வைத்திருந்த மரியாதை சுக்குநூறாக உடைந்து விட்டது. அவரை வக்கிரதன்மையின் அடையாளமாக பார்க்கிறேன்.

காந்தியை விமர்சித்த பிறகும் திருமாவளவனை காங்கிரஸ் கூட்டணியில் வைத்திருக்கிறது. காங்கிரசை பொருத்தவரை காந்தியைவிமர்சித்தால்கண்டு கொள்ள மாட்டார்கள். சோனியா காந்தியையோ ராகுல் காந்தியையோ விமர்சித்தால் மட்டுமே துள்ளி குதிப்பார்கள் என்று கூறினார்.

# த.வெ.க. ஒரு குட்டி 'திராவிட' கட்சி தமிழிசை விமர்சனம்

சென்னை, அக். 5

தமிழ்நாடு பாஜக மூத்த தலைவரும் தெலுங்கானா மாநில முன்னாள் கவர்னருமான டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னை தியாகராய நகரில் உள்ள கமலாலயத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:



தம்பி விஜய் தனது மாநாட்டு கடிதத்தில் மற்ற கட்சிகளைப் போல் நாம் சாதாரண கட்சி அல்ல என்று குறிப்பிட்டுள்ளார். எத்தனையோ கட்சிகள் ஆண்ட கட்சிகளாக இருக்கின்றன. பல ஆண்டுகளாக அரசியலில் இருக்கின்றன.

உங்கள்கட்சி புதியகட்சி உங்கள் கட்சியை உயர்வாக சொல்வதில் தவறில்லை அதே நேரத்தில் மற்றகட்சிகளையும்அதன் தலைவர்களையும் மதிக்க வேண்டும். இப்போது ஒரு குட்டி திராவிட கட்சியைப் போலத்தான் விஜயின்கட்சியும் இருக்கிறது.

பெரியாரையும் கும்பிடுகிறார்கள் கடவுளையும் கும்பிடுகிறார்கள். நேரம் காலம் பார்த்துதான் எல்லாவற்றையும் செய்கிறார்கள் அதாவது தி.மு.க. எதை செய்கிறதோ அதே போலத்தான் தம்பி விஜயின் கட்சியும் செய்கிறது. சுருங்கச் சொன்னால் தி.மு.க.வை போல் விஜய் கட்சியும் இரட்டை வேடம் போடுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மது விலக்கை அமல்படுத்த தி.மு.க. அரசு தயங்குகிறது ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு

சென்னை, அக். 5

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

டாஸ்மாக் மூலம் வருகின்ற வருமானம் தமிழ்நாடு அரசுக்கு செல்கின்ற நிலையில், இதற்கு ஏன் மத்திய அரசு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று தெரியவில்லை. இந்தியாவில் குஜராத், பீகார் உள்ளிட்ட சில மாநிலங்களில் மது விலக்கு நடைமுறையில் இருக்கிறது.

அதேபோன்ற நடவடிக்கையை எடுக்க தி.மு.க. அரசு ஏன் தயங்குகிறது என்று தெரியவில்லை.



தி.மு.க.விற்கு மது விலக்கை கொண்டு வர மனமில்லை, வருமானத்தையும் இழக்க விரும்பவில்லை. மது விலக்கு குறித்து மத்திய அரசு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று தி.மு.க.வும், அதன் தோழமைக் கட்சிகளும் கூறுவது போகாத ஊருக்கு வழி தேடும் செயலாகும். தி.மு.க.பிறர் மீது பழி போடும் போக்குக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மெரினாவில் விமானப்படையின் பிரமாண்ட ஒத்திகை: ரசித்து பார்த்த பொதுமக்கள்

சென்னை, அக். 5

இந்திய விமானப் படையின் 92ம் ஆண்டு கொண்டாட்டத்தை யொட்டி சென்னை மெரினா கடற்கரையில் வருகிற 6ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) விமான சாகச நிகழ்ச்சி நடைபெறுகிறது.



அன்று காலை 11 மணிக்கு தொடங்கி நடைபெறும் இந்த சாகச நிகழ்ச்சியை கண்டுகளிப்பதற்காக மெரினா கடற்கரையில் லட்சக்கணக்கானோர்திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காணும் பொங்கல் தினத்தில் மேற்கொள்வது போன்று மெரினா கடற்கரை பகுதி முழுவதும் போலீசார் தீவிரமாக கண்காணிக்க உள்ளனர்.

விமான சாகச நிகழ்ச்சியை கண்டு ரசிக்க வருபவர்கள் கடலில் இறங்கி குளிக்க வருகிற 6ந்தேதிதடைவிதிக்கப்பட உள்ளது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம், காலையில் இருந்தே மக்கள் மெரினாவில் கூடுவார்கள் என்பதால் அவர்களை ஒழுங்குபடுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விமான சாகச நிகழ்ச்சியையொட்டி 3 நாட்கள் ஒத்திகை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்படி நேற்று முன்தினமும், நேற்றும் 2 நாட்கள் ஒத்திகை நடத்தப்பட்டது. இதனை பொது மக்கள் கண்டு ரசித்தனர்.

இந்த நிலையில் இன்று 72 விமானங்கள் பங்கேற்கும் பிரமாண்ட ஒத்திகை நடைபெற்றது. 6ந் தேதி விமான சாகச நிகழ்ச்சி நடைபெறும்போது பங்கேற்கும் அத்தனை விமானப் படை விமானங்களும் ஒத்திகையில் பங்கேற்கின்றன.

இந்த ஒத்திகை 3 மணி நேரம் 7 பிரிவுகளாக நடைபெற்றது. இந்த ஒத்திகையின்போதுவிமானப்படை வீரர்கள் மெய்சிலிர்க்கும் வகையிலும் மயிர்கூச்செரியும் வகையிலும் சாகச நிகழ்ச்சியை செய்து காட்டினர்.

இந்த ஒத்திகை நிகழ்ச்சியினை பொதுமக்கள் வெயிலையும் பொருட்படுத்தாமல் குடையை பிடித்துக்கொண்டு நின்று கண்டுகளித்தனர்.

# கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரத்து குறைவால் பீன்ஸ், தக்காளி விலை உயர்வு



போரூர், அக். 5

சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டிற்கு கடந்த சில நாட்களாக பீன்ஸ், தக்காளி வரத்து குறைந்து உள்ளது. இதனால் அதன்விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு மொத்த விற்பனையில் தக்காளி ஒரு கிலோ ரூ.35 முதல் ரூ.40க்கு மட்டுமே விற்கப்பட்ட நிலையில் தற்போது வரத்து குறைவால் அதன் விலை அதிரடியாக உயர்ந்து உள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டில் மொத்த விற்பனையில்இன்றுஒருகிலோ தக்காளிரூ.60வரையிலும் வெளிமார்க்கெட்டில் உள்ளகாய்கறி மற்றும் சூப்பர்மார்க்கெட் கடைகளில் ரூ.70 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேபோல் மொத்த விற்பனையில் கடந்த வாரம் பீன்ஸ் ஒரு கிலோ ரூ.50க்கு விற்கப்பட்ட நிலையில்தற்போது அதன் வரத்து பாதியாக குறைந்துள்ளதால் விலை இரண்டு மடங்காக அதிகரித்து உள்ளது. இன்று ஒரு கிலோ பீன்ஸ் ரூ.100க்கு விற்கப்படுகிறது.

இதுகுறித்து தக்காளி மொத்த வியாபாரி ஒருவர் கூறும்போது, கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திராமற்றும்கர்நாடகா மாநிலங்களில் இருந்து தினசரி 60 லாரிகள் வரை தக்காளி விற்பனைக்கு வருவதுவழக்கம்.ஆனால் மழை காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் கடந்த சில நாட்களாகவே தக்காளியின் வரத்து 45 முதல் 50 லாரிகளாக குறைந்துவிட்டது. இதே போல் பீன்ஸ் வரத்தும் பாதியாக குறைந்து போனது. இதனால் தக்காளி, பீன்ஸ் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வரும் நாட்களிலும் இதே நிலைதான் இருக்கும் என்றார்.

# காவிரி உபரிநீர் திட்டம் நிறைவேற்ற வலியுறுத்தி கடையடைப்பு



தருமபுரி, அக். 5

காவிரி உபரிநீர் திட்டம் நிறைவேற்ற வலியுறுத்தி தருமபுரி மாவட்டம் முழுவதும் பா.ம.க. சார்பில் இன்று காலை 9 முதல் மதியம் 12 மணிவரை அரை நாள் கடையடைப்பு போராட்டம் அழைப்பு விடுவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மாவட்டம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. அசம்பாவிதங்கள் நடைபெறாமல் மாவட்டம் முழுவதும் போலீசார் குவிக்கப்பட்டுபாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டின் வறண்ட மாவட்டமாகவும், வேலைவாய்ப்பற்ற பின்தங்கிய மாவட்டமாகவும் தருமபுரி இருந்து வருகிறது. இதனால் தருமபுரியில் காவிரி உபரி நீர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று பத்தாண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதை செயல்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும்மேற்கொள்ளவில்லை என்று பா.ம.க. சார்பில் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தது.

தருமபுரி காவிரி குடிநீர் திட்டத்திற்கு ஆண்டுக்கு 3 டிஎம்சி மட்டுமே நீர் தேவைப்படும் என்றும், ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக பலநூறு டி.எம்.சி காவிரி நீர் வீணாக கடலில் கலக்கும் நிலையில், இதனால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது. காவிரி ஆற்றின் உபரி நீரை தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஏரிகளில் நிரப்பும் திட்டம் செயல்படுத்த வேண்டும். ரூ.650 கோடி மட்டுமே செலவாகும்.

இந்தத்திட்டத்தால், ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் 15 லட்சம் பேருக்கு குடிநீர் வசதி கிடைக்கும். இதன் மூலம்பலலட்சம்பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தருமபுரி மாவட்டம் வளம் பெறும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் சுட்டிக்காட்டினார்.

ஒட்டுமொத்த மாவட்டமும் பயன் பெறும் தருமபுரி காவிரி உபரி நீர்த் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.650 கோடியை செலவழிக்க மறுக்கிறது என்று குற்றம்சாட்டிய அன்புமணி, "திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி 4ந் தேதி (இன்று) சனிக்கிழமை தருமபுரி மாவட்டம் முழுவதும் அரை நாள் கடையடைப்பு போராட்டம் நடத்த பா.ம.க சார்பில் அழைப்பு விடுத்து இருந்தார்.

இதைத்தொடர்ந்து தருமபுரி மாவட்டத்தில் பா.ம.க. சார்பில் வணிக நிறுவனங்கள், ஓட்டல்கள், காய்கறி கடைகள், தள்ளுவண்டி கடைகள் என அனைத்து வியாபாரிகள், வணிக நிறுவனத்தினரிடம்துண்டு பிரசுரங்களை வழங்கி காவிரி உபரிநீர் திட்டம் நிறைவேற்று வலியுறுத்தி நடத்தப்படும் அரை நாள் கடையடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

இதற்கிடையே எந்த வணிகர்களையும் கட்டாயப்படுத்திகடையடைப்பு செய்ய சொல்வோ அல்லது கடைகளை மூட வலியுறுத்தி மிரட்டல் விடுப்பதோ குற்றம். எனவே அவ்வாறு செயல்படுவோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்.

இயல்பாக வழக்கம் போல் கடை செயல்படவும், வணிகம் மேற்கொள்ளவும் யாதொருவரும் அச்சம் கொள்ள தேவையில்லை. போலீசார் போதுமான பாதுகாப்பு வணிகர்களுக்கும், கடை மற்றும் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் என்று மாவட்ட கலெக்டர் சாந்தி அறிவித்து இருந்தார்.

தருமபுரி நகரின் முக்கிய பகுதியானபஸ்நிலையம், நேதாஜி பைபாஸ், திருப்பத்தூர் சாலை, பென்னாகரம் சாலை, கிருஷ்ணகிரி பைபாஸ் சாலை, ஆறுமுக ஆசாரி தெரு, சின்னசாமி நாயுடு தெரு, அப்துல்முஜீப் தெரு, சித்தவீரப்பசெட்டி தெரு, எஸ்.வி.சாலை மற்றும் பிடமனேரி, இலக்கியம் பட்டிஉள்ளிட்டஅனைத்து பகுதிகளிலும் இன்று காலை முதல் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. ஒரு சில டீக்கடைகள் காலை 8 மணி வரை திறக்கப்பட்டிருந்தது.

இந்த கடையடைப்பு போராட்டத்தையொட்டி அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் இருக்க தருமபுரி நகர் பகுதி முழுவதும் மாவட்ட எஸ்.பி. மகேஸ்வரன் உத்தரவின் பேரில் டி.எஸ்.பி. சிவராமன் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட போலீசார் பஸ் நிலையம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதுபோன்று கம்பைநல்லூர், மொரப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் கடைகள் அடைக்கப்பட்டு பொதுமக்களின் அடிப்படை தேவைகளான டீ கடை, உணவகங்கள் உள்ளிட்ட எந்த கடைகளிலும் திறக்கப்படவில்லை.

இதுபோன்று பாலக்கோடு கடைவீதி, எம்.ஜி. ரோடு, தர்மபுரி, ஒசூர், பெங்களூர் மெயின் ரோடு, ஸ்துபி மைதானம் ஆகிய பகுதிகளில் வணிகர்கள் அனைத்து கடைகளும் கடை அடைத்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பென்னாகரம், நல்லம்பள்ளி, காரிமங்கலம், அரூர் ஆகிய பகுதிகளிலும் இன்று கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது. மேலும் மாவட்டம் முழுவதும் அந்தந்த பகுதிகளில் போலீசார் பாதுகாப்பு பணிக்காக குவிக்கப்பட்டு உள்ளனர்.

# சட்ட விரோத பண பரிமாற்ற வழக்கு செந்தில் பாலாஜி நீதிமன்றம் வருகை

சென்னை, அக். 5

சட்ட விரோத பண பரிமாற்ற வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டு சுமார் 471 நாட்கள் சிறையில் இருந்த செந்தில் பாலாஜிக்கு சுப்ரீம் கோர்ட் ஜாமின் வழங்கியது.



இதையடுத்து வெளியே வந்த செந்தில் பாலாஜி அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்டார். இதனை தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி செந்தில் பாலாஜி அமலாக்கத்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜராகி கையெழுத்திட்டார்.

இந்த நிலையில், சட்ட விரோத பண பரிமாற்ற வழக்கு தொடர்பாக சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆஜராகி உள்ளார்.

# சனாதனம் பவன் கல்யாணுக்கு உதயநிதி ஸ்டாலின் பதிலடி

சென்னை, அக். 5

சனாதனம் வைரஸ் போன்றது என்ற உதயநிதியின் பேச்சை கண்டித்து ஆந்திர துணை முதலமைச்சர் பவன் கல்யாண் பேசியிருந்தார்.



சனாதன தர்மத்தை யாரேனும் அழிக்க முயன்றால், ஏழுமலையானின் பாதத்தில் இருந்து சொல்கிறேன், நீங்கள்தான் அழிந்து போவீர்கள். உங்களைப் போல நிறைய பேர் வந்து போய்விட்டார்கள். ஆனால் சனாதன தர்மம் அப்படியேதான்நிலைத்திருக்கிறது என்று பவன் கல்யாண் விமர்சித்து இருந்தார்.

இந்நிலையில் ஆந்திர துணை முதலமைச்சர் பவன் கல்யாண் விமர்சனம் தொடர்பான கேள்விக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

பொறுத்திருந்து பாருங்கள். சிரித்த முகத்துடன் LETS WAIT AND SEE என அவர் பதில் அளித்துள்ளார்.

# மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கடனுதவி வழங்க துணை முதலமைச்சர் உதயநிதி மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம்

சென்னை, அக்.5

2026 சட்டமன்ற தேர்லுக்கு தி.மு.க. இப்போதே தயாராகி வருகிறது. அந்த தேர்தலில் 200 தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற்று மெஜாரிட்டி ஆட்சி அமைக்கதிட்டமிட்டுள்ளது. இதற்கான வியூகம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆண்களை விட பெண்கள் ஓட்டு அதிகமாக உள்ளதால் பெண்களின் ஓட்டுகள் சிதறாமல் கிடைக்க என்னென்ன வழிகள் உள்ளதோ அதை அனைத்தையும் தி.மு.க. கையாண்டு வருகிறது.

அந்தவகையில்தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணம் மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரிகளில் சேரும் மாணவிகளுக்கு மாதந் தோறும் ரூ.1000 ஊக்கத் தொகை என பல்வேறு உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதுதவிரமகளிர்சுய உதவிக்குழுக்களுக்கு அதிக அளவில் சுழல் நிதி வழங்கவும் இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பொதுத்தேர்தலுக்கு இன்னும் 18 மாத காலமே உள்ளதால் ஆட்சி காலம் முடிவடைவதற்குள்சுமார் ரூ.90 லட்சம் கோடி அளவுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்காக மாவட்ட வாரியாக கடனுதவி வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்ய தமிழக மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில் துணை முதல்மைச்சர் உதயநிதி பங்கேற்று மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடனுதவி வழங்க உள்ளார்.

2009ம் ஆண்டு துணை முதல் அமைச்சராக மு.க.ஸ்டாலின் இருந்த போது மாவட்டம் வாரியாக சென்று பலமணி நேரம் ஒவ்வொரு சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கியது போல், இப்போது துணை முதலமைச்சராக உள்ள உதயநிதி சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்க உள்ளார். இதற்காக மாவட்ட வாரியாக உதயநிதியின் சுற்றுப்பயணம் தயாராகி வருகிறது. ஆயுதபூஜைக்கு பிறகு அவர் ஒவ்வொரு மாவட்டமாக சென்று வரும் வகையில் பயணத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. நடிகர் விஜய் புதுக்கட்சி ஆரம்பித்துள்ள நிலையில் தி.மு.க.வின் வாக்குகளை தக்க வைத்துக்கொள்ளவும், பெண்கள் வாக்குகளை அதிகளவில் பெறுவதற்கும் இந்த வியூகம் 'கை கொடுக்கும்' என தி.மு.க. தலைமை கணக்கு போட்டுள்ளது.

# தொழில் முதலீடுகளை ஈர்க்க தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அன்புமணி ராமதாஸ் குற்றச்சாட்டு

சென்னை, அக். 5

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட தொழில் திட்டங்களின் எண்ணிக்கை 500 சதவீத உயர்த்திக் கூறுகிறார் அமைச்சர். அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கையை 1000 சதவீதத்துக்கும் கூடுதலாக உயர்த்திக் கூறுகிறார் தொழில்துறை அமைச்சர். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது தொழில் முதலீடுகளைக் கொண்டு தமிழ்நாட்டை வளர்க்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை; மாறாக, பொய் முதலீடுகளைக் கொண்டு தங்களுக்கு விளம்பரம் தேடிக்கொள்வதில் மட்டும் தான் தி.மு.க. அரசு தீவிரம் காட்டுகிறது. இந்த பொய்களை நம்பி மக்கள் ஏமாற மாட்டார்கள்.



எனவே, தமிழக அரசு சொல்லிக் கொள்ளும் அளவுக்கு தொழில் முதலீடுகளைஈர்த்து இருந்தால் அது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். இல்லாவிட்டால்தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் படுதோல்வி அடைந்துவிட்டதை ஒப்புக் கொண்டு மக்களிடம் வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# முட்டத்தார். ஒய்க்காப் மேனிலைப்பள்ளி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் இரத்தம் மற்றும் உடல் உறுப்பு தான விழிப்புணர்வு பேரணி

விழுப்புரம், அக். 5

முட்டத்தார். ஒய்க்காப் மேனிலைப்பள்ளி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் இரத்தம் மற்றும் உடல் உறுப்பு தான விழிப்புணர்வு பேரணி ஜே.ஆர்.சிழ்கன்வீனர், ம. பாபு செல்வதுரை துவக்கி வைத்தார்.




விக்கிரவாண்டி வட்டம்.முட்டத்துார் ஒய்க்காப் மேனிலைப்பள்ளி N.S S அமைப்பு சார்பில் நடைபெற்று வரும் முகாமில் இரத்தமும் உடலுறுப்பு தானமும் என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதனை விழுப்புரம் கல்வி மாவட்ட ஜே.ஆர்.சி கன்வீனர் முனைவர், ம.பாபு செல்வதுரை சிறப்புரையாற்றி பேரணியை துவக்கிவைத்தார். N.S.S. திட்ட அலுவலர் S. டேவிட்சார்லஸ்நியூபிகன் தலைமையில். ஊராட்சி மன்றத் தலைவி. விஜயா அர்சுணன் வாழ்த்தினார். ஆசிரியர்கள் ஜெ. டேவிட் ஜெயபிரகாஷ், புஷ்பாகரன், K.செல்வக்குமார், விமல் ஆகியோருடன் N.S.S. திட்ட மாணவர்கள் பங்கேற்றனர். முட்டத்துார் கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

# புதிய தலைமைத் தேர்தல் அதிகாரி: 3 பேர் பெயர் பட்டியல் தயாரிப்பு

சென்னை, அக். 5

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியாக உள்ள சத்யபிரத சாகுவுக்கு மாநில அரசுப் பணியான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டு உள்ளது.

இதைத்தொடர்ந்து அவர் தலைமைத் தேர்தல் அதிகாரி பொறுப்பில் இருந்து விரைவில் விடுவிக்கப்படுகிறார். புதிய தேர்தல் அதிகாரி நியமிக்கப்படும் வரை அவர் அந்த பதவியில் நீடிப்பார் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




சத்ய பிரதசாகுவுக்கு பதிலாக புதிய தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிக்க இந்திய தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தி வருகிறது.

இதற்காக தமிழக பிரிவு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் 3 பேரின் பெயர்களை கொண்ட பட்டியலை மாநில அரசிடம் தேர்தல் ஆணையம் கேட்டுள்ளது.

அதன்படி தமிழக அரசு செயலாளர் அளவிலான 3 பேர் பெயர் பட்டியலை தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த பட்டியலில் இருந்து ஒருவரை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவிக்க உள்ளது.

புதிதாக நியமிக்கப்பட உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரியே, 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டசபைத் தேர்தலை நடத்துவார். எனவே அதற்கேற்ப தேர்தலை மனதில் வைத்து மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை இந்திய தேர்தல்ஆணையம்நியமிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

புதிய தலைமைத் தேர்தல் அதிகாரி குறித்த அறிவிப்பு சில தினங்களில் வெளியாகும் என எதிர் பார்க்கப் படுகிறது.

# அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. ஒருங்கிணைப்பு குழு மீண்டும் இன்று கூடுகிறது




சென்னை, அக். 5

2026 சட்டசபை தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தி.மு.க.வில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஏற்படுத்தப்பட்டு தேர்தல் வியூகம் வகுக்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் ஒவ்வொரு அணிகளின் மாநில நிர்வாகிகளை அறிவாலயத்துக்கு அழைத்து அவர்களின் செயல்பாடுகள் பற்றி ஆய்வு செய்து அறிவுரை வழங்கி வருகின்றனர்.

இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் இந்த நேர்காணலை நடத்தி வருகின்றனர்.

தி.மு.க.ஐ.டி. பிரிவு, சுற்றுச்சூழல், விளையாட்டு மேம்பாடு ஆகிய 3 அணி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து நாளை காலையிலும் அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தேர்தல் ஒருங்கிணைப்பு குழு கூடுகிறது. இதில் மருத்துவர் அணி, மீனவர் அணி, சிறுபான்மையினர் அணியின் மாநில நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

# நள்ளிரவில் அகோரிகள் நடத்திய நவராத்திரி பூஜை

துவாக்குடி, அக்.5

திருச்சி அரியமங்கலத்தில் ஜெய் அகோர காளி கோவில் உள்ளது. இதனை காசியில் அகோரி பயிற்சி பெற்ற அகோரி குருவான மணிகண்டன் பூஜைகள் செய்து நிர்வகித்து வருகிறார். இங்கு சனிக்கிழமை, அமாவாசை, பவுர்ணமி, அஷ்டமி மற்றும் விஷேச காலங்களில் சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

இங்கு இந்த ஆண்டுக்கான நவராத்திரி விழா தொடங்கியது. முதல் நாள் ஜெய் அகோர காளி சமயபுரம் மாரியம்மன் அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். தொடர்ந்து, நள்ளிரவில் அகோரிகள் தங்கள் உடல் முழுவதும் திருநீறு பூசி கொண்டு சிறப்பு யாகபூஜை நடத்தினர்.



நள்ளிரவில் நடைபெற்ற மகாருத்ர யாகத்தின் போது அகோரி குருவான மணிகண்டன், ருத்ராட்ச மாலைகளை உருட்டியபடி, மந்திரங்களை ஜெபித்து, நவதானியங்கள் பழ வகைகள் உள்ளிட்ட பொருட்களை அக்னி குண்டத்தில் இட்டு யாகபூஜை செய்தார்.

இந்த யாகபூஜையின் போது சக அகோரிகள் யாவரும் டம்ராமேளம் அடித்தும், சங்கு நாதங்கள் முழங்கியும், மந்திரங்களை ஓதினர். தொடர்ந்து ஜெய் அகோர காளி, ஜெய் அஷ்ட காலபைரவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் மகாதீபாராதனை நடைபெற்றது. இதில் பெண் அகோரிகள் உட்பட தமிழகம் மற்றும் வடமாநில பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# கவிஞர் மு.மேத்தா, பாடகி சுசீலாவுக்கு "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருதுகளை வழங்கினார் முதல்வர்

சென்னை, அக். 5

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், திமுகவின் முன்னாள் தலைவருமான கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவினைப் போற்றிடும் வகையில் கவிஞர் மேத்தா, பின்னணிப் பாடகி பி. சுசீலா ஆகியோருக்கு, கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்து இருந்தது.

இந்நிலையில் சென்னை தலைமைச்செயலகத்தில் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை கவிஞர் முகமது மேத்தா, பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். பாடகி சுசிலாவுக்கு விருதை வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவரது உடல்நிலை குறித்து கேட்டறிந்தார்.

இதனைத்தொடர்ந்து அர்ச்சகர்களின் குழந்தைகளுக்கு உதவித்தொகையை முதலமைச்சர் வழங்கினார். 500 மாணவர்களுக்கு மொத்தமாக ரூ.50 லட்சம் கல்வி உதவித்தொகையை வழங்கினார்.

# கூடங்குளம் முதல் அணு உலையில் மீண்டும் மின் உற்பத்தி தொடக்கம்

நெல்லை, அக். 5

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதல் மற்றும் இரண்டாம் அணு உலைகள் மூலம் தலா ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 3 மற்றும் 4ம் அணு உலைகள் கட்டுமான பணிகள் இறுதி கட்டத்தை எட்டிவிட்டது. மேலும் 5 மற்றும் 6வது அணு உலைகள் கட்டுவதற்கான பூர்வாங்க பணிகளும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த 1ந்தேதி திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு காரணமாக முதலாவது அணு உலையில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதனால் ஆயிரம் மெகாவாட் மின்உற்பத்தி பாதிக்கப்பட்டது. அந்த கோளாறை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் முழு வீச்சில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் அந்த பழுது இன்று அதிகாலையில் சரி செய்யப்பட்டது. தொடர்ந்து இன்று காலை முதல் மின் உற்பத்தி மீண்டும் தொடங்கியது. தொடக்கத்தில் 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலையில் ஆயிரம் மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படும் என கூடங்குளம் அணுமின் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கூடங்குளம் அனுமின் நிலையத்தின் 2வது அணு உலையில் ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

# கையில் 'GOAT' மோதிரத்துடன் நடிகர் விஜய் பகிர்ந்த நச் புகைப்படம்






தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியத் தொடங்கியுள்ள நடிகர் விஜய் இனி படங்களில் நடிக்கப்போவதில்லை என்று அறிவித்திருந்தார். கடைசியாக வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய் நடித்திருந்த 'தி கோட்' திரைப்படம் கடந்த செப்டம்பர் 5 ஆம் தேதி வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்றது.

இதைத்தொடர்ந்து 'விஜய் 69' திரைப்படம் ஹெச். வினோத் இயக்கத்தில் உருவாக உள்ளது. இதுவே விஜய் நடிக்கும்கடைசிபடம்என்றுகூறப்படுகிறது.இதற்கிடையே தா.வெ.க.வின் முதல் மாநாடு இம்மாதம் 27 ஆம் தேதி விக்ரவாண்டியில்வைத்துநடைபெறஉள்ளதால்அதற்கான பணிகளிலும் விஜய் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்நிலையில் 'GOAT' என எழுதப்பட்டிருக்கும் மோதிரத்தை அணிந்து அந்த புகைப்படத்தை விஜய் தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். விஜய்யின் அரசியல் பிரவேசத்துக்கான ரெபெரென்ஸ்கள் கோட் படத்திலும் ஏராளமாவே இருந்தன.

சினிமாவில் மட்டுமல்லாது அரசியலிலும் விஜய் கிரேடஸ்ட் ஆஃப் ஆல் டைமாக உருவெடுக்க வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்ப்பில் உள்ள நிலையில் விஜய்யின் இந்த புகைப்படம் அரசியல் சினிமா என இரண்டுக்கும் சிம்பாலிக்காக அமைத்துள்ளது. இதற்கிடையே 'தி கோட்' திரைப்படம் நேற்றைய தினம் நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியானது குறிப்பிடத்தக்கது.

உங்கள் அருகாமையில் உள்ள திரையரங்குகளில் ரிலீசான படங்களைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தெரிந்துக் கொள்ள இந்த லிங்க்ஐ க்ளிக் செய்யவும்.

# கள்ளச்சந்தையில் லட்சத்தில் விற்கும் டிக்கெட்டுகள்.. மும்பை 'COLD PLAY' இசை நிகழ்ச்சியை சுற்றும் சர்ச்சை



இசைக்கான உயரிய விருதான கிராமி விருதுகளை வென்று உலக அளவில் ரசிகர்களை கொண்ட பிரிட்டனை சேர்ந்த பிரபல ராக் [ROCK] இசைக்குழுவாக கோல்ட்ப்ளே [COLD PLAY] திகழ்கிறது. அவர்களது உலக சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக அடுத்த வருடம் [2025] ஜனவரியில் இந்தியாவருகைதரஉள்ளகோல்ட்ப்ளேமும்பையில் தொடர்ச்சியாக ஜனவரி 18 மற்றும் 19 மற்றும் 21 ஆகிய தேதிகளில் மூன்று இசை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது.

கோல்ட்ப்ளே இசைக்கு மும்பையில் அதிக ரசிகர் பட்டாளம் இருப்பதால் இந்த நிகழ்ச்சிகளுக்கான டிக்கெட் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டது. கோல்ட்ப்ளே நிகழ்ச்சிகளுக்கான டிக்கெட் விற்பனையை புக் மை ஷோ [BOOK MY SHOW] இணையதளம் அதிகாரபூர்வமாக விற்பனை செய்தாலும் டிமாண்ட் காரணமாக மற்ற தளங்களில் டிக்கெட்கள் விற்கப்பட்டு வருகின்றன.

டிஒய் பாட்டீல் ஸ்டேடியத்தில் நடக்கும் இந்த நிகழ்ச்சியில் "லவுஞ்ச்" இருக்கைகளுக்கான டிக்கெட்டுகள் BOOK MY SHOW ல் 1 டிக்கெட் ரூ. 35,000க்கு விற்கப்பட்டன. ஆனால் தற்போது கள்ளச்சந்தையில் இவ்வாறு சட்டவிரோதமாககள்ளச்சந்தையில் 1 டிக்கெட் ரூ.3 லட்சம் முதல் ரூ. 7.7 லட்சம் வரை விற்பனையாகி வருகிறது.

எனவே இவ்வாறு நடக்கும் கள்ளச்சந்தை வியாபாரம் குறித்து BOOK MY SHOW நிறுவனம் சார்பில் போலீசிலும் புகார் அளித்துள்ளது. மேலும் முறையற்ற வகையில் விற்பனை செய்யப்பட்ட டிக்கெட்டுகளை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் BOOK MY SHOW தெரிவித்துள்ளது. ஆனால் அதிக காசு கொடுத்து வேறு தளங்களில் டிக்கெட் வாங்கிய ரசிகர்கள் அவை செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளதால் கலக்கமடைந்துள்ளனர்.

# டி20 உலகக்கோப்பை: இந்திய பெண்கள் அணி நியூசிலாந்துடன் பலப்பரீட்சை






சார்ஜா மற்றும் துபாயில் பெண்களுக்கான டி20 உலகக் கோப்பைகிரிக்கெட் தொடர்நேற்று தொடங்கியது. 10அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. "ஏ" பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை அணிகள் உள்ளன.

"ஏ" பிரிவில் இடம் பிடித்துள்ள பாகிஸ்தான் இலங்கை அணிகள் மோதின. இதில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது. இந்த போட்டி இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

ஹர்மன்ப்ரீத் தலைமையிலான இந்தியா ஷபாலி வர்மா, ஸ்மிரிதி மந்தனா, ரோட்ரிக்ஸ் உள்ளிட்ட முக்கிய வீராங்கனைகளுடன் பலமான பேட்டிங் ஆர்டரை கொண்டுள்ளது. பந்து வீச்சிலும் தீப்தி சர்மா உள்ளிட்டோர் உள்ளனர்.

இதனால் முழு பலத்தையும் வெளிப்படுத்தி நியூசிலாந்துக்கு எதிரான முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி வாகை சூட விரும்பும். அதேவேளையில் நியூசிலாந்து அணியும் பலம் வாய்ந்தது. இந்திய அணியை வீழ்த்த முனைப்பு காட்டும். இதனால் இன்றைய போட்டியில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது.

"பி" பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்காட்லாந்தை வங்கதேசம் வீழ்த்தியிருந்தது.



# முதலமைச்சர் கோப்பை விளையாட்டில் 33 ஆயிரம் வீரர் , வீராங்கனைகள் பங்கேற்பு

முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் கடந்த மாதம் நடைபெற்றது.

இதில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுப்பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் என 5 வகை பிரிவாக போட்டிகள் நடத்தப்பட்டன.

மாநிலம் முழுவதில் இருந்தும் 11½ லட்சம் பேர் பங்கேற்றனர். மாவட்ட, மண்டல அளவிலான போட்டிகள் நிறைவடைந்த நிலையில் இதில் வெற்றி பெற்றுள்ள 33 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் மாநில விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

இந்தநிலையில்தமிழ்நாடுவிளையாட்டுமேம்பாட்டுஆணையத்தின்சார்பில்முதலமைச்சர்கோப்பைக்கான மாநில விளையாட்டு போட்டிகள் இன்று முதல் 24ந்தேதி வரை சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் நடைபெறுகிறது. தடகளம், டென்னிஸ், பேட்மிண்டன், கபடி, சிலம்பம், பளுதூக்குதல், கால்பந்து, ஆக்கி, குத்துச்சண்டை, நீச்சல், கிரிக்கெட், கூடைப்பந்து, கைப்பந்து, கேரம், வாள்வீச்சு, செஸ், ஜிம்னாஸ்டிக்ஸ் உள்பட 36 வகையான விளையாட்டுகள் நடத்தப்படுகிறது. இந்த முறை காட்சி போட்டியாக இஸ்போர்ட்ஸ் இடம் பெறுகிறது.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து வீரர்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அணியினருடன் வரும் அலுவலர்களுக்கு டிஷர்ட் வழங்கப்படுகிறது. அத்துடன் அவர்களின் உணவு, தங்குமிடம் மற்றும் போக்குவரத்து செலவுகள் அவர்களின் சொந்த மாவட்டத்திலிருந்து கவனித்துக் கொள்ளப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளுக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.37 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

போட்டிக்கான தொடக்க விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறுகிறது. பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற துளசிமதி, டிரிபிள் ஜம்ப் வீரர்பிரவீன்சித்ரவேல் ஆகியோர்தொடக்கவிழாவில் ஜோதியை ஏந்தி செல்கின்றனர். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் போட்டியை தொடங்கி வைக்கிறார்.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.